வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு
வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
3rd Term Examination, - 2020

FWC

பொருளியல்
# Economics

Three Hours | Gr. 12 (2021) | 21 | T | I

## பகுதி I

**அறிவுறுத்தல்கள் :–**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**

01. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் எது பேரினப்பொருளாதார நேர்க்கூற்றாகும்.
   1) ஒவ்வொரு அரச ஊழியருக்குமான மாதாந்தச் சம்பளத்தை ரூ 10000 ஆக அதிகரிக்க வேண்டும்.
   2) அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவிகளை இலங்கை பெற வேண்டும்.
   3) ஒவ்வொரு நபரும் சமமான வருமானத்தைப் பெற வேண்டும்.
   4) ஒவ்வொரு குடிமகனுக்கும் இலவச மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டும்.
   5) பணநிரம்பலுக்கும் பொதுவிலைமட்டத்திற்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பானது காணப்படும்.


02. எந்த உற்பத்திக்காரணியும் அதற்கான உதாரணமும் சரியாகக் காணப்படுகின்றது என்பதனைத் தெரிவு செய்க.

| உற்பத்திக் காரணி | உதாரணம் |
|---|---|
| 1) மூலதனம் | பணம் |
| 2) முயற்சி | ஒரு கம்பனிக் கணக்காளர் |
| 3) உழைப்பு | ஒரு இயந்திர மனிதன் |
| 4) நிலம் | ஒரு பாயும் ஆறு |
| 5) மூலதனம் | சேமிப்பு வைப்பிலுள்ள ரூ 100,000 |

03. பொருளாதார முறைமையொன்றில் காணப்படுகின்ற பிரதான அலகுகளின் கடமைகள் கீழே தரப்படுகின்றன.
   அ) காரணிகளை நிரம்பல் செய்வது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளல்.
   ஆ) உற்பத்திக் காரணிகளைக் கொள்வனவு செய்தல்.
   இ) வருமானங்களை மீள் பங்கீடு செய்தல்.
   ஈ) எதனை? எந்தளவு / உற்பத்தி செய்தல்? எவ்வாறு உற்பத்தி செய்தல்? யாருக்காக உற்பத்தி செய்தல் போன்ற தீர்மானங்களை மேற்கொள்ளல்.

   மேலே தரப்பட்டவற்றுள் வியாபார நிறுவனத்தின் கடமைகளை மட்டும் உள்ளடக்கியவை எவை?
   1) அ மற்றும் ஆ    2) ஆ மற்றும் இ    3) ஆ மற்றும் ஈ
   4) இ மற்றும் ஈ    5) அ மற்றும் ஈ


04. மூலதனப் பொருட்கள், நுகர்வுப்பொருட்கள் ஆகிய இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்யும் பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி சாத்திய வரையி PQ ஆல் தரப்படுகின்றது.




OS அளவு நுகர்வுப்பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு யாது?

1) மூலதனப் பொருளில் OR அளவு.
2) மூலதனப் பொருளில் PR அளவு.
3) நுகர்வுப் பொருளில் SQ அளவு.
4) மூலதனப் பொருளில் TS அளவு.
5) நுகர்வுப் பொருளில் SQ அளவும் மூலதனப் பொருளில் PR அளவும்.

05. கீழே உள்ள வரைபானது குறித்தவொரு பண்டத்தின் கேள்வி வளையியைக் காட்டுகின்றது கீழே தரப்படுபவற்றுள் எந்தக்கூற்று கேள்விக் கோட்டின் நடத்தைப் பற்றிச் சரியாகக் குறிப்பிடுகின்றது.




1) கேள்வியில் ஏற்படுகின்ற குறைவு காரணமாக விலையில் குறைவு ஏற்படும்.
2) விலை மாற்றமடையும் போது சிறிதளவானதோ அல்லது பாரியளவானதோ கேள்வித்தொகை மாற்றமடையும்.
3) கேள்வி எவ்வாறு அதிகரிக்கிறதோ அது போலவே விலையும் அதிகரிக்கும்.
4) கேள்வியில் ஏற்படுகின்ற மாற்ற வீதத்திற்கேற்ப விலையில் மாற்றம் ஏற்படும்.
5) விலையில் ஏற்படுகின்ற அதிகரிப்பு கேள்வியில் ஏற்படுகின்ற அதிகரிப்பால் ஏற்படுகின்றது.


06.

| **குறிப்பிட்ட பண்டத்தின் விலை (ரூபா)** | **வாராந்த கேள்வித்தொகை (அலகுகள்)** | **வாராந்த நிரம்பல் தொகை (அலகுகள்)** |
|---|---|---|
| 40 | 200 | 100 |
| 50 | 150 | 160 |
| 60 | 100 | 200 |

விலை"யாதாக" இருக்கும் போது உற்பத்தியாளன் வருமானம் உச்சத்தைப் பெறும்.

1) விலை ரூபா 20　2) விலை ரூபா 30　3) விலை ரூபா 40
4) விலை ரூபா 50　5) விலை ரூபா 60

07. கீழே தரப்படும் வரைபானது மூன்று நிரம்பல் வளையிகளைக் குறித்து நிற்கின்றது.




மேலே தரப்பட்டுள்ள நிரம்பல் கோடுகளின் விலை சார் நிரம்பல் நெகிழ்ச்சி தொடர்பாக பெறக் கூடிய முடிவு என்ன.

1) விலை அதிகரித்தல் $S_2$ நிரம்பல் கோட்டின் வழியே நிரம்பல் நெகிழ்ச்சி அதிகரிக்கும்.
2) எந்தவொரு விலையிலும் $S_1$ இன் விலை சார் நிரம்பல் நெகிழ்ச்சியைக் காட்டிலும் $S_3$ இன் நிரம்பல் நெகிழ்ச்சி குறைவானது ஆகும்.
3) எந்தவொரு விலையிலும் $S_2$ இன் நிரம்பல் நெகிழ்ச்சி $S_3$ இன் நிரம்பல் நெகிழ்ச்சியிலும் அதிகமாகும்.
4) எந்தவொரு விலையிலும் $S_1$ இன் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி $S_2$ இன் நிரம்பல் நெகிழ்ச்சியிலும் அதிகமாகும்.
5) விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி மூன்று நிரம்பல் கோடுகளிலும் சமமாகக் காணப்படும்.

08. கீழே தரப்படுபவற்றுள் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளை இனங் காண்க.

| காரணி | |
|---|---|
| அ | பொருட்களின் பல் பயன்பாட்டுத்தன்மை. |
| ஆ | உற்பத்திக் காரணிகளின் அசையும் தன்மை. |
| இ | வருமானத்தில் பொருள் மீது செலவிடும் பங்கு. |
| ஈ | விலை மாற்றத்திற்கேற்ப நிரம்பலை மாற்றுவதற்கு எடுக்கும் காலம். |

1) காரணி அ மற்றும் ஆ
2) காரணி இ மற்றும் ஈ
3) காரணி ஆ மற்றும் இ
4) காரணி ஆ மற்றும் ஈ
5) காரணி அ மற்றும் ஈ


09. குறித்த பாணிற்கான கேள்வி (Qd) மற்றும் மிகைக்கேள்வி (ED) அட்டவணை வருமாறு.

| விலை | Qd | ED |
|---|---|---|
| 10 | 7000 | 6000 |
| 20 | 6000 | 3000 |
| 30 | 5000 | 0 |
| 40 | 4000 | – 3000 |
| 50 | 3000 | – 6000 |

மேலே தரப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சமநிலை விலை மற்றும் தொகைகள்.

1) ரூபா 10, 6500 அலகுகள்
2) ரூபா 20, 6000 அலகுகள்
3) ரூபா 30, 5000 அலகுகள்
4) ரூபா 40, 4000 அலகுகள்
5) ரூபா 50, 3000 அலகுகள்


10. ஒரு வீட்டுத்துறையின் நுகர்வுப்பண்டம்




மேலே தரப்பட்ட வரைபில் புள்ளி 1 ஆரம்பச் சம நிலையைக் குறித்து நிற்கின்றது. தற்போது ஏனையவை மாறாத போது மிகவும் நெருங்கிய பதிலீட்டுப்பண்டத்தின் விலை அதிகரிக்குமாயின் புதிய சமநிலைப்புள்ளி.

1) புள்ளி 2 2) புள்ளி 3 3) புள்ளி 4 4) புள்ளி 5 5) புள்ளி 6

11. பந்துக்கான சந்தைக்கேள்வி நிரம்பல் வளையிகள் வருமாறு.




விலையானது $P_1 - P_2$ ஆக அதிகரிப்பதற்கு ஏதுவான காரணி.

1) அரச வரிகளில் ஏற்படும் ஒரு குறைவு.
2) அரசின் மானிய வழங்களில் ஏற்படும் ஒரு குறைவு.
3) மூலப்பொருட்களின் விலையில் ஏற்படும் ஒரு குறைவு.
4) தொழில்நுட்பத்தில் ஏற்படும் ஒரு முன்னேற்றம்.
5) குறித்த பண்டத்தின் விலையில் ஏற்படும் குறைவு.

12. போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பண்டத்தின் சந்தைக் கேள்வி (Qd) நிரம்பல் (Qs) சமன்பாடுகள் வருமாறு.

$$Qd = 10 - P$$
$$Qs = -2 + 2P$$

அரசு அலகு வரியாக 3/= வை விதிக்கின்றது. வரிக்கு பின்னரான உற்பத்தியாளன் தேறிய வருமானம்.

1) ரூபா 24 2) ரூபா 16 3) ரூபா 12 4) ரூபா 8 5) ரூபா 4

13. குறித்த பண்டத்தின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு.

$Qd = 100$ (கேள்விச்சமன்பாடு)

$Qs = -50 + 5P$ (நிரம்பல் சமன்பாடு)

தள விலை ஒன்றை ரூ 40 ஆகப்பிரகடணப்படுத்தி அரசு மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்யுமாயின், உற்பத்தியாயின் மிகை, சமூக நலன் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றம்.

| | உற்பத்தியாளன் மிகையில் ஏற்படும் மாற்றம் | சமூக நலனில் ஏற்படும் மாற்றம் |
|---|---|---|
| 1) | 1250 ஆல் அதிகரிக்கும் | 2000 ஆல் குறைவடையும் |
| 2) | 1250 ஆல் அதிகரிக்கும் | 500 ஆல் குறைவடையும் |
| 3) | 1000 ஆல் அதிகரிக்கும் | 250 ஆல் குறைவடையும் |
| 4) | 1000 ஆல் அதிகரிக்கும் | மாற்றமின்றிக் காணப்படும் |
| 5) | 1250 ஆல் அதிகரிக்கும் | 1750 ஆல் குறைவடையும் |

14. கீழே தரப்படும் கூற்றினைப் பூர்த்தி செய்யத்தேவையான விடயத்தைத் தெரிவு செய்க.

- சராசரிப் பௌதீக உற்பத்தி (APP) உச்சமாகக் காணப்படும் போது……………

**விடயம்**

அ) பௌதிக எல்லை உற்பத்திக்கு இது சமமாகக் காணப்படும்.

ஆ) மொத்தப் பௌதீக உற்பத்தி உச்சமாகக் காணப்படும்.

இ) பௌதீக எல்லை உற்பத்தி உச்சமாகக் காணப்படும்.

1) விடயம் அ மட்டும் சரியானது 2) விடயங்கள் அ, ஆ சரியானது

3) விடயங்கள் அ, இ சரியானது 4) விடயங்கள் ஆ, இ, சரியானது

5) விடயங்கள் அ, ஆ, இ சரியானது

15. குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி குறித்து நிற்பது.

1) அதிகளவு உற்பத்திக் காரணிகள் வேலைக்கமர்த்தப்படும் போது, ஆரம்பத்தில் வெளியீடு அதிகரித்து பின் குறைவடையும்.
2) அதிகளவு உற்பத்திக் காரணிகளை வேலைக்கமர்த்தும் போது, வெளியீடு அதிகரிக்கின்ற போதிலும் குறைந்து செல்லும் வேகத்தில் அதிகரிக்கும்.
3) நிலையான காரணியுடன், அதிகளவு மாறும் காரணிகளைத் தொடர்ச்சியாக அதிகரிக்கும் போது வெளியீடு ஆரம்பத்தில் அதிகரிக்கும் வேகத்தில் அதிகரித்துப் பின்னர் குறைவடையும்.
4) நிலையான காரணியுடன், அதிகளவு மாறும் காரணிகளைத் தொடர்ச்சியாக அதிகரிக்கும் போது குறித்த எல்லைக்குப் பின்பு வெளியீடு குறையும் வேகத்தில் அதிகரிக்கும்.
5) சகல உள்ளீட்டில் ஏற்படும் அதிகரிப்பு, வீதத்தைக் காட்டிலும் வெளியீட்டில் ஏற்படும் அதிகரிப்பு வீதம் குறைவாகக் காணப்படல்.

16. ஒரு நிறைபோட்டி நிறுவனத்தின் தரவுகள் வருமாறு

| | |
|---|---|
| சராசரி வருமானம் ரூபா | 20 |
| உட்கிடையான செலவு ரூபா | 40 |
| வெளியீட்டு மட்டம் | 9 அலகுகள் |
| மொத்த நிலையான செலவு ரூபா | 30 |
| சராசரி செலவு ரூபா | 12 |

நிறைபோட்டி நிறுவனத்தின் அலகிற்கான பொருளியல் இலாபத்தினை மதிப்பீடு செய்தால் அது.

1) ரூபா 180 2) ரூபா 108 3) ரூபா 72 4) ரூபா 27 5) ரூபா 8

17. மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீட்டில் உள்ளடக்கப்படக் கூடிய உற்பத்தி நடத்தை எது?
   1) கொடுப்பனவின்றி வீட்டினுள் மேற்கொள்ளப்படும் மனையாள் வேலைகள்.
   2) கட்டடவாக்கம்.
   3) இயற்கையாக கிடைக்கின்ற இயற்கை வளங்கள்.
   4) கற்றல் மற்றும் ஓய்வு.
   5) மனித தலையீடின்றி இயற்கையாக ஏற்படுகின்ற வளங்களின் அதிகரிப்பு அல்லது விலை மாற்றங்கள்.

18. "அடிப்படை விலை" பின்வரும் எம்முறையில் மதிப்பிட முடியும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | அடிப்படை விலை | = | உற்பத்தியாளர் விலை | - | உற்பத்தியின் போதான மானியம் |
| 2) | அடிப்படை விலை | = | உற்பத்தியாளன் விலை | - | உற்பத்தி பொருள் மீதான மானியம் |
| 3) | அடிப்படை விலை | = | உற்பத்தியாளன் விலை | - | உற்பத்தி பொருள் மீதான தேறிய வரி |
| 4) | அடிப்படை விலை | = | உற்பத்தியாளன் விலை | + | உற்பத்திச் செய்முறையின் போதான தேறிய வரி |
| 5) | அடிப்படை விலை | = | உற்பத்தியாளன் விலை | + | உற்பத்தி பொருள் மீதான தேறிய வரி |

19. அ) நுகர்வுச் செலவினம்
   ஆ) முதலீட்டுச் செலவினம்
   இ) அரச கொள்வனவு
   ஈ) ஏற்றுமதி
   உ) இறக்குமதி
   ஊ) தேறிய ஏற்றுமதி

   மேலே தரப்பட்டவற்றுள் எவற்றைச் சேர்ப்பதன் மூலம் மொத்தச் செலவினம் (AE) பெறப்படும்.

   1) அ, ஆ, இ, ஈ    2) அ, ஆ, ஈ, உ    3) அ, ஆ, இ, உ
   4) அ, ஆ, இ, ஊ    5) அ, இ, ஈ, உ

20. ஒரு பொருளாதாரத்தின் கற்பனையான தரவுகள் வருமாறு.

   தன்னிச்சையான செலவீடு = 1000
   தன்னிச்சையான வரி = 100
   தன்னிச்சையான நுகர்வு = 400
   வரிப்பெருக்கி = – 3

   இந்தப் பொருளாதாரத்தின் சமநிலை வெளியீட்டு மட்டம்.

   1) 300    2) 400    3) 3000    4) 3900    5) 4000

## பகுதி II

❖ **அறிவுறுத்தல்.**

**இப்பகுதி உப பிரிவு (அ), உப பிரிவு (ஆ) ஆகியவற்றைக் கொண்டது. உப பிரிவு (அ) விலிருந்து இரண்டு வினாக்களையும் உப பிரிவு (ஆ) விலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

### உப பிரிவு 'அ'

01. 1) "பொருளாதார வளங்கள்" என்பதனை வரைவிலக்கணப்படுத்துக? அவை எவ்வாறு வகைப்படுத்தப்படுகின்றது? (3 புள்ளிகள்)

2) அ) ஊழிய வளத்தின் அளவைத் தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ஆ) முயற்சியாண்மையின் முக்கிய தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

3) அ) தெரிவின் போது தோன்றும் அமையச் செலவு தொடர்பான முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ஆ) உற்பத்தியின் போது அமையச்செலவு தோற்றம் பெறாத சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

4) "பொருளாதார வினைத்திறன்" அடைவதற்கு "உற்பத்தி வினைத்திறன்" மட்டும் பொதுவான நிபந்தனையாகும்" இக்கூற்றின் தன்மைபற்றி விளக்குக? (4 புள்ளிகள்)

5) பேரினப்பொருளாதார பிரயோகங்களை வெளிப்படுத்துவதற்கு எவ்வாறு உற்பத்தி சாத்திய வளையியைப் பயன்படுத்தலாம்? (5 புள்ளிகள்)

02. 1) "கேள்வி விதி" என்பதனை விளக்குக? கேள்விக் கோடு ஏன் கீழ்நோக்கிய சரிவுடையதாகக் காணப்படுகின்றது? (4 புள்ளிகள்)

2) கீழ்நோக்கிச் சரித்து செல்லும் கேள்விக் கோட்டின் வழியே கேள்வி நெகிழ்ச்சிக்கு அமைய உற்பத்தியாளன் வருமானம் வேறுபடுவதை வரைபின் உதவியுடன் விளக்குக. (4 புள்ளிகள்)

3) குறித்த பண்டத்தின் சந்தை நிரம்பலைத் தீர்மானிக்கும் கருத்தில் கொள்ளப்படும் பண்டத்தின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகளையும் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

4) பொருளாதார ரீதியில் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி முக்கியத்துவம் வாய்ந்தது ஏன் என குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

5) குறித்த பண்டத்திற்கான கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் வருமாறு.

$$Qd = 60 - 0.5P$$

$$Qs = -30 + P$$

அ) கேள்வி நிரம்பல் **சமன்பாடுகளைத் தீர்ப்பதன்** மூலம் சமநிலை விலை, சமநிலைத் தொகை என்பவற்றைக் காண்க. (3 புள்ளிகள்)

ஆ) சமநிலைப் புள்ளியில் கேள்வி நெகிழ்ச்சியை மதிப்பிடுக. (1 புள்ளி)

03. 1) குறித்த பண்டத்தின் கேள்வி நிரம்பல் அட்டவணை வருமாறு. இந்த "Z" பண்டத்திற்கு 3/= அலகு வரி விதிக்குமுன் உள்ள அட்டவணை வருமாறு.


| பண்டத்தின் விலை (வரிக்குமுன்) ரூபா | கேள்வித் தொகை (000) அலகுகள் | நிரம்பல் தொகை (000) அலகுகள் |
|---|---|---|
| 1 | 150 | 120 |
| 2 | 140 | 140 |
| 3 | 130 | 160 |
| 4 | 120 | 180 |
| 5 | 110 | 200 |

அலகு வரியாக 3/= வை அரசு விதிக்கின்றது எனின்

அ) வரிக்குப் பின்னரான புதிய சமநிலைத்தொகை எவ்வளவு? (2 புள்ளிகள்)

ஆ) நுகர்வோன் தாங்கும் அலகு வரி எவ்வளவு? (2 புள்ளிகள்)

2)




மேலே உள்ள வரைபானது சந்தை கேள்வி நிரம்பல் வளையிகளைக் குறித்து நிற்கின்றது. இவ் X பண்டத்தின் ஒவ்வொரு அலகு மீதும் சிறப்பு மானியம் ஒன்றை வழங்கியுள்ளதை $S_S$ கோடு காட்டுகின்றது.

அ) மானியத்தின் பின்னரான நுகர்வோன் மிகைப் பிரதேசம்.

ஆ) மானியத்தின் பின்னரான உற்பத்தியாளன் மிகைப் பிரதேசம்.

இ) மானியத்தின் பின் நுகர்வோன் செலவுப் பிரதேசம்.

ஈ) அரசின் செலவும் பிரதேசம் என்பவற்றைத் தருக.

(1 புள்ளி x 4=4 புள்ளிகள்)

3) அ) ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலையை அர்த்தமுள்ளதாக்குவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ஆ) ஆகக் கூடிய கட்டுப்பாட்டு விலை விதிப்பதன் காரணமாக விலைப்பொறிமுறை இயக்கமற்றுப் போவதால் பற்றாக்குறைப் பண்டங்களைப் பங்கீடு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் **விலையல்லாத** மூலங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

4) ஆகக் குறைந்த கட்டுப்பாட்டு விலையை அர்த்தமுள்ளதாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

5) ஆகக் குறைந்த விலைக் கட்டுப்பாட்டினை நிர்ணயித்தலின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

## உப பிரிவு 'ஆ'

➢ **இப்பகுதியிலிருந்து இரண்டு வினாக்களை மாத்திரம் தெரிவு செய்க.**

04. 1) அ) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியை விளக்குக? (2 புள்ளிகள்)

ஆ) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியின் எடுகோள்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

2) கணக்கியல் இலாபம், பொருளியல் இலாபம் ஆகிய எண்ணக்கருக்களை விளக்குக. (4 புள்ளிகள்)

3) குறுங்கால உற்பத்திக் கோடுகளுக்கும் குறுங்காலச் செலவுக் கோடுகளுக்குமிடையேயான தொடர்பை விளக்குக. (4 புள்ளிகள்)

4) அ) நிறைபோட்டிச் சந்தையினதும்

ஆ) சிலருரிமைச் சந்தையினதும் பண்புகளைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

5) மாற்றல் கட்டணம், சிக்கனவாடகை என்பவற்றை வரைபட உதவியுடன் விளக்குக? (4 புள்ளிகள்)

05. 1) "பேரினப் பொருளாதாரக் கொள்கைகள்" என்பதனை விளக்கி பேரினப் பொருளாதாரக் கொள்கைகளுக்கு உதாரணங்கள் தருக? (4 புள்ளிகள்)

2) அ) மொத்த உற்பத்திப் பெறுமதி (GVO) என்பதனை விளக்குக? (2 புள்ளிகள்)

ஆ) குறித்த பொருளாதாரத்தின் கற்பனையான தரவுகள் வருமாறு.

| | |
|---|---|
| மொத்த வெளியீட்டுப் பெறுமதி | 9500 |
| வாடகை | 2000 |
| கூலி | 1000 |
| வட்டி | 800 |
| இலாபம் | 500 |
| நிலையான மூலதன நுகர்வு (பெறுமானத் தேய்வு) | 700 |
| மூலப்பொருள் செலவு | 3000 |
| சேவைக் கட்டணங்கள் | 1500 |

வருமான வழி மூலத்தின் அடிப்படையில் மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி. (G.V.A) யைக் காண்க? (2 புள்ளிகள்)

3) அ) மொத்த உள்நாட்டு உற்பத்திக்குள் உள்ளடங்காத பயன்தரு பொருளாதார நடவடிக்கைகள் எவை? (2 புள்ளிகள்)

ஆ) தேசிய கணக்குகளைத் தயாரிக்கும் போது கைவிடப்படுகின்ற பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள் எவை? (2 புள்ளிகள்)

4) ஒரு பொருளாதாரத்தின் கற்பனையான தரவுகள் வருமாறு.
(தரவுகள் யாவும் மில்லியன் ரூபாவில்)

- வீட்டுத்துறை நுகர்வுச் செலவினம் 400
- இலாப நோக்கமின்றி வீட்டுத்துறைக்கு வழங்கப்படும் சேவைகள் 100
- அரசின் நுகர்வுச் செலவு 50
- தேறிய ஏற்றுமதி 200
- மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் 400
- இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றம் 200
- பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம் 150

பின்வருவனவற்றைக் கணிக்குக.
அ) இறுதி நுகர்வுச் செலவு
ஆ) மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்.
இ) சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டுச் செலவு.
ஈ) சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி.

(2 புள்ளிகள் x 4 = 8 புள்ளிகள்)

06. 1) பேரினப் பொருளாதாரச் சமநிலை என்பதனை விளக்கி பேரினப் பொருளாதாரச் சமநிலையை முன்வைக்கக் கூடிய அணுகுமுறைகளைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

2) திறந்த பொருளாதாரம் ஒன்றின் மொத்த கேள்வி வளையியை இடது புறம்நோக்கி நகர்வடையச் செய்யும் காணிகளைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

3) திறந்த பொருளாதாம் ஒன்றில் வெளிப்பாய்ச்சல்கள், உட்பாய்ச்சல்களைத் தருக. (4 புள்ளிகள்)

4) பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீள்வதற்காக அரசு தனிநபர் வருமான வரிகளை 100 மில்லியன் ரூபாவால் குறைத்தல் அல்லது அரச கொள்வனவுகளை 100 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானிக்கின்றது. இப்பொருளாதாரத்தில் பொதுவிலை மட்டங்கள் நிலையாக உள்ளது. எல்லை நுகர்வு நாட்டம் 0.75 (MPC = 0.75) இச் செயற்பாடுகளால் மொத்தக் கேள்வியாக ஏற்படும் தாக்கம் யாது? எச்செயற்பாடு அதிகளவு விரிவுத்தாக்கத்தை ஏற்படுத்தும்

5) ஒரு மூடிய பொருளாதாரத்தின் தரவுகள் வருமாறு. (4 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (Y) | = ரூபா | 70 பில்லியன் |
| நுகர்வு (C) | = ரூபா | 35 பில்லியன் |
| முதலீட்டுச் செலவினம் (I) | = ரூபா | 15 பில்லியன் |
| அரச மாற்றல் (TR) | = ரூபா | 5 பில்லியன் |
| வரி (T) | = ரூபா | 15 பில்லியன் |

கீழே தரப்பட்டுள்ளவற்றைக் கணிக்குக.
அ) செலவிடக்கூடிய தனிநபர் வருமானம் (yd) (1 புள்ளி)
ஆ) தனியார் துறை சேமிப்பு (1 புள்ளி)
இ) பொதுத்துறை சேமிப்பு (1 புள்ளி)
ஈ) அரச கொள்வனவு (1 புள்ளி)